2015 செப்டம்பர் 25]

348—

நியாய விலைக் கடை கட்டடம்

***53047—திருமதி எல். ஜெயசுதா:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியம், அனாதிமங்கலம் கிராமத்திலுள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியத்திலுள்ள, கொழப்பலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படும், அனாதிமங்கலம் நியாய விலைக் கடை, 337 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாய விலைக் கடையாகச் செயல்பட்டு வருகிறது. அந்த நியாய விலைக் கடை ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அரசுக் கட்டடத்தில் 8–6–2000 முதல் செயல்பட்டு வருகிறது. அக்கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால் அதே கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் தற்போதைக்கு எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.*

திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூக்களுக்கும் புன்னகையைக் கற்றுத் தந்த போயஸ் தோட்டத்து பொன் மாதாவாக, (மேசையைத் தட்டும் ஒலி) மூவேந்தர் தேசத்து உயிர் மூச்சாக, சதிதனை மதியால் சாய்க்கின்ற தெளிவாக, சத்தியத்தை நிலைநாட்டி சாதிக்கும் துணிவாக, தடை தகர்த்து பகை வெல்லும் தன்மானச் சிங்கமாக, தமிழ்த்தாயின் தலைமகளாகத் திகழ்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி இதய*

தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி கூறுகிறேன். பெரணமல்லூர் ஒன்றியத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற பகுதிநேரக் கடைகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்,*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பகுதிநேரக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு சார்பாகவோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாகவோ அதன் நிதியிலிருந்து கொடுப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த நான்காண்டு ஆட்சிக் காலத்தில் 1,294 முழுநேர நியாய விலைக் கடைகள் மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைகளுக்குப் புதிதாகக் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற செய்தியையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறை ரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.*

திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்மனச் செம்மலின் புகழ் வடிவாகத் திகழ்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்குகிறேன். பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் நெஞ்சார்ந்த நன்றியைப் பதிவு செய்து அமர்கின்றேன். நன்றி.*